# எங்கள் மாவீர மறவர்..
# தீயிலும் எரியாத தீபங்கள்..!

அஞ்சலி மாலை

தாயினால் பிறந்திட்ட குஞ்சுகள்-எந்த
தீயாலும் அழியாத பிஞ்சுகள்..!-தாய்மண்
மீட்புக்காய் புதைந்திட்ட வித்துக்கள்-நாங்கள்
கோடி ஆண்டுகள் ஆனாலும்
தேடித்,தேடி வணங்கிடும் தீபங்கள்
தேசத்தின் நிலையான தெய்வங்கள்.

தமிழர் தலையை நிமிர்த்திய
தன்மானவீரர்கள்-எதிரியை
தணலாக்கி எரித்திட்ட புறங்காணா வீரர்கள்..!
ஈன்றதாயை மறந்திட்ட தீரர்கள்
ஈழத்தேசிய தலைவரை நேசித்த வீரர்கள்..!
தமிழன்னை பெற்றிட்ட சொத்துக்கள்
தமிழர் தன்மான வீரத்தின் முத்துக்கள்..!

தலைவர் நேசிக்கும் தம்பியாய் இணைந்தவர்
தமிழ்வீர வெற்றிக்கு துணையாக நின்றவர்..!
எதிரியை எரிக்கும் குண்டாகிப் பாய்ந்தவர்- அவன்
எரிந்திடும் தீக்குள்ளே சிலையாகி சிரித்தவர்
எங்கள் மாவீரத் தெய்வங்கள்.!எந்த
தீயாலும் எரிக்காத பிஞ்சுகள்

அன்புடன்
வேலணையூர் பொன்னண்ணா
குடும்பம்
டென்மார்க்